**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 189/2025</u>**

நாள் – 08.04.2026

PW 1 – முருகேசன்

த/பெ – முத்துசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of April 2026.**

**<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தை நான் பாஸ்கர் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றேன். அந்த பாஸ்கரனுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் அவருடைய அத்தை பொட்டாயாள் என்பவர் எழுதி வைத்த உயில் சாசனத்தின்படி அவருக்கு பாத்தியம். அந்த பொட்டாயாள் என்பவருக்கு சொத்து எப்படி வந்தது என்றால் அவரது அப்பாவிடம் இருந்து வாரிசு முறையில் வந்தது. தாவா 1ம் அயிட்ட சொத்தில் 1/18 பங்கும், தாவா 2ம் அயிட்ட சொத்தில் 1/9 பங்கும் முத்துசாமி மனைவி செல்வம் என்பவருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து இறந்துபோய்விட்ட நிலையில் அவருடைய மகள் 3ம் பிரதிவாதி கவிதாவிற்கும் தாவா சொத்துக்களில் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் நானும், பிரதிவாதிகளும் சேர்ந்து கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொள்ள நான் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கவிதா தாவா சொத்துக்களை ஒரே

இனமாக பிரித்து பாகப்பிரிவினை செய்துகொள்ளலாம் என்று என்னிடம் சொன்னார் என்றும், ஆனால் நான்தான் சொத்துக்களை விகிதாச்சார படிதான் பிரிக்கவேண்டும் என்று சொல்லி மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொள்ள 3ம் பிரதிவாதி தயாராக இருந்தபோதிலும் நான்தான் அவரை வஞ்சிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மறுத்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ள வேண்டி அவருக்குரிய நீதிமன்றக் கட்டணமான ரூ.2500/−ஐ செலுத்தியுள்ளார் என்றும் சொன்னால் சரிதான்.

**<u>1 ,2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கும் கடந்த 14.03.2024 தேதியிட்ட இரு கிரையப்பத்திரங்கள் மூலம் பொதுவில் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் 2ம் பிரதிவாதிக்கும் கடந்த 06.11.2023 மற்றும் 16.08.2024−ம் தேதிகளிட்ட கிரையப்பத்திரங்கள் மூலம் தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொள்ள நான் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கவிதா தாவா சொத்துக்களை ஒரே இனமாக பிரித்து பாகப்பிரிவினை செய்துகொள்ளலாம் என்று என்னிடம் சொன்னார் என்றும், ஆனால் நான்தான் சொத்துக்களை விகிதாச்சார படிதான் பிரிக்கவேண்டும் என்று சொல்லி மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

2. தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொள்ள 1,2 பிரதிவாதிகள் தயாராக இருந்தபோதிலும் நான்தான் அவரை வஞ்சிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மறுத்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ள வேண்டி அவர்களுக்குரிய நீதிமன்றக் கட்டணமான தலா ரூ.2500/- வீதம் செலுத்தியுள்ளார்கள் என்றால் சரிதான்.அதனால் தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளுக்குரிய பங்கு சொத்தை பொறுத்து பாகம் பிரித்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :-** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.04.09 19:09:17 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**